# மிருகக்காட்சிச்சாலை

அன்பரசனும் அம்மாவும் தெகிவளையிலுள்ள மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றனர். அன்பரசனின் நண்பன் கரீமும் அவர்களுடன் சென்றான்.

அம்மா : பிள்ளைகளே, இதுதான் மிருகக்காட்சிச்சாலை. நாம் இலக்க ஒழுங்கின்படி சென்றால் இலகுவாக எல்லாவற்றையும் பார்க்கலாம்.

அன்பரசன் : அம்மா, இதோ பாருங்கள் அழகான மீன்கள்.

அம்மா : ஆமாம், இதிலே நிறைய வண்ண மீன்கள் இருக்கின்றன. சிவப்பு நிற மீன், நீலம், மஞ்சள், ஆ...... அவை எவ்வளவு அழகானவை.

கரீம் : அன்பரசா, இதோ குரங்குகளின் வேடிக்கையைப் பார்.



அன்பரசன் : ஆமாம், அவை ஒவ்வொரு கம்பியிலும் தொங்கித் தொங்கிச் செல்கின்றன.

அம்மா : அதோ, சின்னக் குரங்கு பல்லைக் காட்டி உடலைச் சொறிகின்றது.

கரீம் : இதனைப் பாருங்கள். தாய்க் குரங்கின் வயிற்றில் குட்டிக் குரங்கு ஒட்டிக் கொண்டிருக்கின்றது.

அம்மா : சரி, நாம் கிளிகளைப் பார்க்கப் போவோமா?

அன்பரசன் : ஆகா..... எத்தனை நிறமான, கிளிகள்?

கரீம் : பச்சை நிறத்தில் மட்டும்தான் கிளிகள் இருக்கும் என்று நான் நினைத்தேன்.

அன்பரசன் : அங்கே பார் கரீம். வகை வகையான பாம்புகளை... பார்க்கவே பயமாக இருக்கின்றது வா; குதிரைகளைப் பார்க்கலாம்.

கரீம் : அவற்றின் உடல்களில் கோடுகள் இருக்கின்றனவே! அவை கோட்டுக் குதிரைகளா?

அம்மா : இல்லை, அவைகள் வரிக்குதிரைகள்

அன்பரசன் : அம்மா, இங்கே பாருங்கள் கழுத்து நீண்ட வரிக்குதிரைகள்.

அம்மா : இல்லை மகனே! அவை ஒட்டகச் சிவிங்கிகள். அங்கே பாருங்கள் அவை தான் மனிதக் குரங்குகள்.

கரீம் : அது என்ன அம்மா?

அன்பரசன் : எனக்குத் தெரியும். அதுதான் கரடி. நான் தொலைக்காட்சியில் பார்த்திருக்கின்றேன். பார், முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு இரண்டு கால்களில் நிற்கின்றது.

அம்மா : பிள்ளைகளே, ஐந்து மணியாகிவிட்டது. வாருங்கள் யானைகளின் விளையாட்டைப் பார்க்கப் போகலாம்.

அன்பரசன் : ஆ..... எத்தனை யானைகள்?

கரீம் : அங்கே பார் யானைக்குட்டி ஒன்று நடனம் ஆடுகின்றது.

அம்மா : அங்கே பாருங்கள் பிள்ளைகளே, யானைகள் ஒன்றின் வாலை ஒன்று பிடித்துக் கொண்டு வட்டமாக நடக்கின்றன.

கரீம் : ஆமாம், அம்மா அழகான காட்சி.

அம்மா : சரி, நேரமாகிவிட்டது. வாருங்கள் வீட்டுக்குப் போகலாம்.

குறிப்பு: ★ மாணவர்களை சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லுங்கள்.

★ மாணவர்கள் நேரடி அனுபவங்களை பெறுவதற்குத் துணை புரியுங்கள்